# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நாமக்கல்

## தாவும் நூலகங்கள் திட்டம்

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், நாமக்கல் பவுல்ட்ரி டவுன் ரோட்டரி சங்கமும் இணைந்து தன்னார்வ ஆசிரியர்களுக்கு 'தாவும் நூலகங்கள்' திட்டமானது 6 பள்ளிகளில் 14.6.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தொடக்க விழாவில் இந்நிறுவன முதுநிலை விரிவுரையாளர் கோ. வேதராஜபால்சன் வரவேற்புரைக் வழங்கினார்.

சூரிய ஒளி , மண், நீர், காற்று, தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்கள் அடங்கிய ஒன்றிக்கு ஒன்று தொடர்பு கொள்ளும் அமைப்புக்கு சுற்றுச்சூழல் என்று பெயர். சூழலில் பௌதிகக் காரணிகளான சூரிய ஒளி, மண், நீர் , காற்று இல்லாமல் உயிரினங்கள் வாழ முடியாது. சுற்றுச்சூழல் அறிவை மாணவர்கள் பெறும்போது சூழல் சார்ந்த தங்களால் முடிந்த முன்னெடுப்புகான மரம் நடுதல், மாசுபாட்டைத் குறைத்தல் போன்றவற்றை வீடுகளிலும், பள்ளிகளிலும் செய்ய முடியும். காலநிலை மாற்றமும் தற்போது பெரியளவில் நடந்து வருகிறது. இதனால் உயிரி அமைப்புகளிலும், புவிக்கோளத்திலும் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. பிளாஸ்டிக் பயன்பாடு, மின்சாரத்தை தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துதல் போன்றவைகளும் வெப்பநிலை உயர்விற்கு காரணமாகின்றன.

சூழலியல் வல்லுநர் கோவை சதாசிவம் எழுதிய தாவங்கள், விலங்கினங்கள் , பறவைகள், ஊர்வன, காலநிலை மாற்றம் போன்ற கருத்துக்களை மாணவர்கள் தெரிந்துகொள்ளும் விதமாக உயிர் இனிது, பூச்சிகளின் தேசம், உயிர்ப்புதையல், நாட்டு விலங்குகள், இறகுதிர் காலம், மரப்பேச்சி, காலம் நடந்த பெருவெளி, காடறிதல்: பயண வழிக் கற்றல், இப்படிக்கு மரம், பறவையின் எச்சத்தில் பூக்குமொரு காடு, ஊர்ப்புறத்துப் பறவைகள், பாம்புகள்: பூவுலகின் தொல்லுயிர் , The Frog (Translated into English by: N.Kalavathy), மாயமாகும் மயிலு , எறும்புகளின் வரிசை கலைகிறது, சில்லுக்கோடு, கழுதைப்புலி, ஆதியில் யானைகள் இருந்தன, தவளை, பல்லி, நம்ம கழுதை நல்ல கழுதை, காலநிலை மாநாடு – பேச மறந்தவை மொத்தமாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த 23 நூல்கள் அடங்கிய தொகுப்பு ' தாவும் நூலகங்கள் ' என்ற திட்டத்தின் வாயிலாக நாராயணிபாளையம், உப்பிலிபாளையம், வேப்பம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, சீராப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளுக்கும், இராசிபுரம் எவி.எம் நிதியுதவி நடுநிலைப் பள்ளிக்கும் நாமக்கல் பவுல்ட்ரி டவுன் ரோட்டரி சங்கத் தலைவர் ஆர். பிரபாகரன் வழங்கினார். மருத்துவர் ப. சண்முகம் வாழ்த்துரை வழங்கினார்.

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் மு. செல்வம் தாவும் நூலகத் திட்டத்தைப் பற்றி பேசுகையில் தாவும் நூலகங்கள் திட்டத்தில் கொடுக்கப்பட்ட நூல்கள் சுற்றுச்சூழலை மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள உதவும் என்றும், ஒரு பள்ளி நூல்களைப் பயன்படுத்தியப் பிறகு நூல்கள் அடுத்த ஒரு பள்ளிக்கு மாற்றப்படும் என்றும், இதன்மூலம் மாணவர்கள் காலநிலை மாற்றத்தை குறைத்து சுற்றுச்சூழலை மேம்படுத்தும் தூதுவர்களாக மாறுவார்கள் எனக் கூறினார்.

தாவும் நூலகத்திட்டத்தில் கற்றல் செயல்பாடுகளான: புத்தகம் வாசித்தல், புத்தகத்தின் கருத்துக்களை விவாதித்தல், வினா – விடை நிகழ்ச்சியை அமைத்தல், இறைவணக்கக் கூட்டத்தில் கருத்துக்களைப் பகிர்தல், நூலைப் பற்றி பேசுதல், நூலைச் சார்ந்த பாடல், பாவனை செய்தல் (miming ) , நூலின் கருத்துக்கள் சார்ந்த ஓவியம் வரைதல், கேள்விகள் உருவாக்குதல், வீட்டாருக்குப் பகிர்தல், நண்பர்களுடன் உரையாடல்,

இயற்கையைப் புரிந்து கொள்ளல், இயற்கைச் சார்ந்த பொதுநல நோக்கு கொள்ளல், கட்டுரைகள் எழுதுதல், இயற்கைச் சார்ந்த செய்திகளைத் திரட்டுதல் போன்றவற்றை பள்ளி மாணவர்கள் மேற்கொள்வார்கள் என நிறுவன முதல்வர் மு. செல்வம் தெரிவித்தார்.

.

.